சிவமயம்

REGISTERED AS A NEWS PAPER IN CEYLON
P. M. G. NO. H. A. 19/300 of 1939

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருசுஉ] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஹூ தை மீ எஉ (1948 ஜனவரி 20 செவ்வாய்க்கிழமை) [இல எக


## பிரார்த்தனை

திருச்சிற்றம்பலம்

'பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.''

—மணிவாசகப்பெருமான்.

திருச்சிற்றம்பலம்

## மதம்மாற்றும் சூழ்ச்சி

### நல்லூர்ப் பயிற்சிக்கழகத்தில் நடைபெறுகிறதாம்

யாழ்ப்பாணம் நல்லூரில், கிறிஸ்தவர்களுக்குரிய ஆசிரியர் பயிற்சிக் கழகம் ஒன்றுண்டு. அங்கே குறித்த ஓர் தொகைக் கிறிஸ்தவ ஆசிரியர் மாணவர்கள் இருந்தால்தான், அரசாங்க உதவி கிடைக்கும். ஆனால் அப்படியான தொகை ஆசிரிய மாணவர்களின்மையால், அங்கே கல்விபயிலும் ஹிந்து வாலிபரையும் கன்னிகைகளையும் தம் மதத்திற் சேர்த்துக் கிறிஸ்தவர் தொகையை அதிகரிக்க, அக் கழகத்து அதிகாரிகள் முயற்சி செய்துவருகின்றனர் என்ற முறைப்பாடு ஒன்று வந்திருக்கிறது.

இப்படியான மதமாற்ற அக்கிரமம் நிகழ்வது உண்மையா இல்லையா என்பதை அரசாங்கம் விசாரணை புரிந்து ஏற்ற நடைவடிக்கை எடுக்க வேண்டும் என்று யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை சென்றவாரம் ஓர் தீர்மானம் நிறைவேற்றி கல்விப் பகுதி மந்திரிக்குச் சமர்ப்பித்திருக்கிறது. கடந்த இரண்டுவருஷகாலத்துக்கிடையிலும் அப்படி மதமாற்றம் செய்யப்பட்ட மாணவர்கள் அப்பயிற்சிக்கழகத்தில் இருந்தால், அவர்களைக் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கையிற் சேர்க்கக்கூடாது என்றும் அச்சபை தீர்மானித்திருக்கிறது.

சைவப்பாடசாலைகளில் இப்போது போதிய பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் இல்லை. இன்னும் அநேக பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் தேவை. ஆகவே சைவப்பயிற்சிக் கலாசாலைகள் இன்னும் அதிகமான ஹிந்துமாணவர்களுக்கு ஆசிரியப்பயிற்சி அளிப்பதற்காக, அவற்றுக்கு இப்போது விதிக்கப்பட்டுள்ள மாணவர் தொகையை நூற்றுக்கு 50 விகிதத்தாலாவது அதிகரிக்கவேண்டும் என்றும் சைவபரிபாலனசபை இன்னொரு தீர்மானத்தையும் நிர்ணயித்திருக்கிறது.

ஓர் பாடசாலை முகாமைக்காரரின் சமயத்துக்கு வேறுபட்ட மாணவர்கள் அப்பாடசாலையிற் கல்வி பயின்றால் அப்படிப்பட்ட மாணவர்பொருட்டு அரசாங்கம் உதவிப்பணம் அந்தப்பாடசாலைக்குக் கொடுக்கவொண்ணாது என்ற இன்னொரு தீர்மானத்தையும், யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை நிறைவேற்றியுளது.

## உயிர்ப்பலியும் ஊரவர் கடமையும்

[மு செல்வநாயகம்]

ஸ்ரீ மன்காமம் இளைஞர் சங்கத்தின் மூன்றாவது வருடாந்தக் கூட்டத்தில், இந்து ஆலயங்களில் ஆடு, கோழி பலியிடும் வழக்கத்தைச் சட்டமூலமாகத் தடைசெய்ய அரசாங்கத்தைத் தூண்டவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டதை இந்துசாதனம் 6-1-48-ல் வெளிவந்த பிரசுரத்தில் வாசித்து சகல சைவசமயிகளும் அவ்வாலிபரின் சமயாபிமானத்தையும், தேசாபிமானத்தையும், ஜீவகாருண்ணியத்தையும் மெச்சுகின்றனர். இவ்வாலிபர் எடுத்த விஷயத்தை முடிப்பதற்கு (உயிரின் வதையை நீக்குவதற்கு) தங்கள் உயிரைத் தியாகம்செய்ய தயங்கமாட்டார்களென நம்புகிறோம். இதுவே இந்தியாவிலுள்ள சீக்கியரின் குருவாகிய நானக், கோவிந்த சிங்கின் ஆனந்தமான உபதேசமாகும்.

உயிரை வதைசெய்யக் கூடாதென்ற சட்டம் ஆங்கிலேயர் எங்கிருக்கின்றார்களோ அங்கெல்லாம் இருக்கின்றது. சட்டமிருந்தும் உயிர்வதை நிற்கவில்லை. ஏனெனில், அதிகாரிகளும், குடியானவர்களும் அதன்படி கடமையை ஆற்றாமையாலாகும். கொலைபுரியலாகாதென்று சமயமும் சட்டமும் வற்புறுத்தியும் மனிதரை மனிதர் கொலைசெய்வது நின்றபாடில்லை. இதற்குக் களவுக்காட்சி கூறும் ஊரவர்களும், பொய்யை மெய்யென்று வாதிக்கும் நியாயதுரந்தரர்களும் காரணகர்த்தாக்களாகும். இவ்வாறிருக்கும்பொழுது மிருகங்களைக் கொல்பவர்களை எவ்வாறு தடைசெய்ய முடியும்? நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைப்பதுபோல, சமயாபிமானமும் ஜீவகாருண்யமும் உள்ளவர்கள் ஒன்றைச் செய்ய, வேட்டைநாயிலும் பார்க்க மோசமாகிய மானிடநாய்கள் வேறொன்றை நினைத்துக்கொண்டு திரி[illegible] வதில் பிரயோசனமில்லை. ஆனால்

மனச்சாட்சி யென்ற சட்டமொன்றே உயிர்ப்பலியை நிற்பாட்ட முடியும்.

மகாத்மாகாந்தியடிகள், மதுவை இந்தியர் அருந்தலாகாதென ஓர் இயக்கத்தைக் கொண்டுவந்த காரணமாக, மலாயாவிலுள்ள எண்ணரிய அறிவிலிகளாகிய தோட்டக் கூலியாட்கள் தனித்தனியாகவும், கூட்டமாகவும் கூடி "நாங்கள் இனிமேல்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

## சைவ வாழ்க்கை

நாம் விரும்பிய ஒன்றைப்பெறும்போது எம் மனத்திலே இன்பம் உண்டாகின்றது. நாம் மாம்பழம் தின்ன விரும்பும்போது அது கிடைக்குமாயின், நாம் இன்புறுகின்றோம். கள்ளுணவை விரும்புகிறவன், அதைப் பருகும்போது இன்புறுகின்றான். அன்றியும், நாம் விரும்பமாட்டாத ஒன்று எம்மைச் சேராவிட்டாலும் நாம் இன்புறுகின்றோம். களவு செய்தவன் அகப்படாமல் தப்பிவிட்டானாயின் மிகவும் சந்தோஷப்படுகிறான.

இப்படியின்றி, நாம் விரும்பிய ஒன்று கிடையாவிட்டாலும், விரும்பாதது வந்துசேர்ந்தாலும் துன்பம் உண்டாகின்றது. எனக்காயினும், என்னைச் சேர்ந்தவர்க்காயினும் என்னுடைய பொருளுக்காயினும் இடர் நேர்ந்தால் துக்கம் உண்டாகிறது. யாராயினும் இடர் செய்தால் அவரிலே கோபம் உண்டாகின்றது. ஏதாயினும் இடர் வரப்போகிறதென்று கண்டால் அச்சம்உண்டாகின்றது.

சைவ வாழ்க்கையிலே துன்பத்துக்காயினும், துக்கத்துக்காயினும், கோபத்துக்காயினும், அச்சத்துக்காயினும இடம்வாராது. பச்சைக்கண்ணாடியை அணிந்துகொண்டு எதைப் பார்த்தாலும் அது பச்சையாகவே தோன்றும். வெண்மையான பாலும் செம்மையான இரத்தமும் நீலமான ஆகாயமும் கரியதாகிய காகமும் பச்சையாகவே தோன்றும், அதுபோல, சைவமாகிய கண்ணாடியாற் பார்த்தால், யாவும உவப்பானவைகளாகவே தோன்றும். நான் விரும்பிய பொருள் கிடையாவிடில் துன்பமில்லை; எனது கப்பல் ஆழ்ந்துபோனால் துக்கமில்லை; என் குழந்தை இறந்துபோம் என்று அஞ்சுவதில்லை; என் பயிரை அழிப்பவனைத் தடுத்தலும கண்டித்தலுமேயன்றிக் கோபித்தலில்லை.

சைவசமயத்தின்படி, நாம் ஆணவமென்னும் வியாதியினாலே பீடிக்கப்பட்டிருக்கிறோம், இந்த வியாதியைத் தீர்க்கும வைத்தியர் சிவபெருமான்; ஆதலால் அவருக்கு "வைத்தியநாதன்'' என்று பெயர். நோயாளி தனக்குப் பொருந்தாத உணவுகளை விரும்புதல் உண்டு. ஆயினும் வைத்தியன் அந்த உணவுகளைக் கொடுக்கமாட்டான். அதுபோல எமக்கு ஆகாத பொருள்களை நாம் விரும்புதல் உண்டு; வைத்தியநாதராகிய கடவுள் அவற்றை எமக்கு அருளமாட்டார், ஆதலால், நாம் விரும்பிய பொருள் நமக்குக் கிடையாவிடில், அது நமக்கு ஆகாததென்று உணர்ந்து, அது கிடையாமற் போனதைப்பற்றி நாம் சந்தோஷப் படல்வேண்டும். நோயாளி விரும்பமாட்டாத பலவற்றை வைத்தியன் அவனுக்குச் செய்கிறான்; ஆமணக்கெண்ணை போன்ற கசப்பானவற்றை உண்ணச் செய்கிறான்; பெரிய கொப்புளத்தைக் கத்தியினாலே கிறி வேதனையை ஆக்குகிறான்; அதுபோல சிவபிரானாகிய வைத்தியநாதர் நாம்விரும்பமாட்டாதவற்றை எமக்குச் சேர்த்தலும், கொடிய வேதனைகளை ஆக்குதலும், எமது ஆணவமாகிய நோயை நீக்கி எம்மைச்சுகமாக வாழும்படி வைத்தற்கேயாம். ஆதலால் எம் முயற்சிகளைக் கடந்து, நாம் வெறுப்பவைகள் எம்மை அடைந்தாலும், நாம் வேதனைகளில் அகப்பட்டாலும, அவைகள் எமது நன்மைக்காகக் கடவுளால் அருளப்பட்டவை என்பதை உணர்ந்து அவைகளைப்பற்றி இன்புறுதலே தக்கதாம். எனது கப்பல் ஆழ்ந்துபோனதும், குழந்தை இறந்துபோவதும் நன்மையானவைகளே. அவைகள் எனக்கு எப்படி நன்மையாகும் என்பதை நாம் அறிய வேண்டியதில்லை 'யாவும் அவருடைய செயலே; அவர் செய்வதெல்லாம் நன்மையே' என்ற நம்பிக்கை உறுதியாயிருந்தால், அப்பர் சுவாமிகள் பாடியருளியபடி,

"நாமார்க்கும் குடியல்லோம்
நமனை அஞ்சோம்
நரகத்திலிடர்ப்படோம்
நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம்
பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை
தாமார்க்கும் குடியல்லாத்
தன்மையான சங்கரன்
நற்சங்க வெண்குழையோர் காதிற்
கோமார்க்கே நாம் என்றும்
மீளாவாளாய்க்
கொய்ம்மலர்ச் சேவடியிணையே
குறுகினோமே''

என்றும்,

"சுண்ணவெண் சந்தனச்சாந்தும்
சுடர்த்திங்கட் சூளாமணியும்
வண்ண உரிவை உடையும்
வளரும் பவளநிறமும்
அண்ணலரண் முரண்ஏறும்
அகலம் வளாய அரவும்
திண்ணன் கெடிலப் புனலும்
உடையாரொருவர் தமர்நாம்
அஞ்சுவதியா தொன்றுமில்லை
அஞ்ச வருவதுமில்லை.''

என்றும் எப்போதும் ஆனந்தமாய் வாழலாம். துக்கம், கோபம், அச்சம் ஆகிய மூன்றும் உடலுக்கே தீமையானவை. என்னுடைய கப்பல் ஆழ்ந்து போனால், பெருமுயற்சி செய்து பொருளைத் தேடி நட்டத்தைத் தீர்த்தலும், எனக்கு யாராவது இடர்செய்ய வரும்போது கோபம் கொள்ளுதலின்றி, அவரைத் தடுத்தலும், குழந்தையானது கொடிய நோயின் வாயில் அகப்பட்டால் அஞ்சுதலின்றி நல்ல வைத்தியம் செய்தலும், அது இறந்துபோனால் "பிறந்தவர் இறக்கை திண்ணம்'' என்பதைக் கண்டு மனங் கலங்காதிருத்தலும் சைவர்களல்லாதாரும் செய்யத்தக்கவைகளாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்துஷு தைமீ எ உ செவ்வாய்க்கிழமை

## உள்நாட்டில் நெல் வாங்குந் திட்டம்

அரிசி, நெல் முதலாம் உணவுப் பொருள்களின் கட்டுப்பாடு தொடங்கியதாகிய யுத்த காலத்திலேயே தொடங்கப்பட்ட உள்நாட்டு நெல் வாங்குந் திட்டம், அக்காலந் தொடக்கம் கட்டுப்பாட்டோடு நடைபெற்று வந்தது; இப்பொழுது அத் திட்டக் கட்டுப்பாடு ஒருவாறு நெகிழ்க்கப்படலாயிற்று: இதுவரையில் இலங்கைமுழுவதிலும் விளைவிக்கப்படும் நெல்லை, அரிவியிடும் போதும சூடு மிதித்தல், நெல்லை வயலிலிருந்து வீட்டுக்கு அகற்றுதல் ஆகிய கருமங்களை நெல் விளைவிப்போர் செய்யும்போதும் அதற்கென நியமிக்கப்பட்ட கட்டுப்பாட்டதிகாரிகளின் பார்வையிற் செய்து, குறிக்கப்பட்ட நெல்லில் விதிக்கப்பட்டவிகித நெல்லை அதிகாரிகளுக்குப் "புஷல்" 6 ரூபா விலையாகக்கொடுத்துவிட்டு எஞ்சிய நெல்லையே வயல் செய்வோர் இல்லத்திற்குக் கொண்டுபோகவேண்டுமென்ற ஒழுங்கு நடைபெற்று வரலாயிற்று.

ஆனல், இந்தக் கட்டுப்பாட்டிற் பல அமிசங்கள் இப்பொழுது தவிர்க்கப் படலாயின; நேற்று (19-1-48)த் தொடக்கம் வருகிற பிப்ரவரிமாசம் 23-ந் தேதிக்கிடையில் உள்நாட்டுநெல் வாங்கும் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் திருந்திய ஒழுங்கு ஆரம்பிக்கப்படும்; இதன்படி 6 ரூபாவிலைக்கு, நெல் விளைவிப்போர் தாம் விளைவிக்கும் நெல்லில் விதிக்கப்பட்டபகுதியைத் தவறுமற் கொடுக்கவேண்டுமென்ற கட்டுப்பாடு இல்லாதொழியும்; பிரியமானவர்கள் தாங்கள் விளைவிக்கும் நெல்லில் விற்கவிருப்பதை, புசல் ஒன்றுக்கு 8 ரூபா விதம் அரசினருக்கே விற்கவேண்டும்; வேறெவருக்கும் விற்கவொண்ணுதென்ற ஒழுங்குண்டாம்; ஆனல், நெல்லை இல்லையேல் அரிசியை ஒரு இடத்திலிருந்து இன்னேரிடத்திற்கு அகற்றுதல் முதலிய விஷயங்கள் இப்பொழுதுள்ள கட்டுப்பாட்டுடனேதா னிருக்குமாம்.

இப்பொழுது அரசினர் செய்யத் தொடங்கியிருக்கும் இந்தப் புதிய ஒழுங்கு தக்கதேயாகும்; ஆனல் இப்படிச் செய்வதனல் நெல்லும் அரிசியும் சோர வியாபாரிகள் வசம் இரகசியமாய்ப் போய் அதிக விலைக்கு விலைப்படுதலும், நெல்லுடையவர்கள் இரக்கமின்றித் தங்களிடத்துள்ள நெல்லினை அநியாய விலைக்கு விற்றலும் குறைந்துவிடுமோ என்பன ஆசங்கைக்கிடமாகும்; நெல் விளைவிப்போர் தங்கள் நெல்லை, புசலொன்றுக்கு 6ரூபா விகிதம் விலை தருதல் தங்களுக்குப் பெரு நஷ்டமெனவும், புஷலொன்றுக்கு 15 ரூபாதந்தாலே ஒருவாறு தங்களுக்குக் "கட்டும்" எனவும் இதுகாறும் புறங்கூறிவந்தார்கள்; அப்படிப்பட்டவர்கள் இப்பொழுது தங்கள் நெல்லைப் புசலொன்று 8 ரூபாவாக அதிகாரிகள் செய்துள்ள ஒழுங்குக்குச்சம்மதித்து அதிகாரிகளுக்குஅவ் விலைக்குமனப்பூர்வமாக விற்பார்களோ என்பது சந்தேகமாம்; எங்ஙனமாயினும் அரிசி, நெல்லென்னுமிவைகளை, இப் புதிய ஒழுங்கு காரணமாக, ஏழைமக்கள் இதுகாறும் பெற்று வயிறு வளர்த்து வந்ததைக்காட்டிலும், இனிமேற் சற்றுக் குறைந்தவிலைக்கு வாங்கி உபயோகிக்கலாமெனக் காத்திருத்தற்கு இடமுண்டு.

## நூற்குறிப்பு

### சைவசமய சாரம்

இச்சிறுநூல், திரிசிராப்பள்ளி பிக்ஷாண்டார் கோவிற் பெருநிலக் கிழார் இராயபகதூர், கோ. இராசகோபால பிள்ளையவாகள் (F R H S) கேள்விப்படி யாழ்ப்பாணம் புலோலி, சைவத் திருவாளர் க. சிவபாதசுந்தரமவர்கள் (B A) எழுதியது. திரிசிராப்பள்ளிச் சைவ சமய பரிபாலன சபையாரின் பிரசுரமாக, மேற்படி பிள்ளையவர்களால் அச்சிடுவித்து வெளியிடப்பெற்றது; இந்நூன்முகவுரை, நூலாசிரியர் சரித்திரச் சுருக்கமென்னு மிரண்டும் திருமயிலை, சைவத் திருவாளர் சே. வெ ஜம்புலிங்கம்பிள்ளையவர்களால் எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளன. இந்நூல் கடவுள், ஆன்மாக்கள், கடவுள வழிபாடு, நல்வினை தீவினைகள், சைவவாழ்க்கை, சைவஒழுக்கங்கள், சைவத்தின் மேன்மை என்னும் ஏழு அரிய வியாசங்களைத் தன்னகத்துக் கொண்டுள்ளது. வியாசங்கள் அற்ப தமிழ்க் கல்வி யுடையவர்கள்தாமும் இனிது விளங்கிக்கொள்ளத்தக்க இலகுவான வசன நடையில் தர்க்கரீதி யமைய, பல மேற்கோள்கள் விரவ எழுதப்பெற் றுள்ளன; பெரிய எழுத்தில் அச்சிடப்பெற்றுள்ளன; வசன நடையும் கொள்கைகளும் மேற்படி பிள்ளையவர்கள் முந்தி யெழுதி வெளியிட்ட சைவபோதம் என்னும வெளியீடுகளை யொட்டி யுள்ளன; இந்நூல் தோற்றத்திற் சிறியதெனினும், காட்சியிற் பெரியதாய், தன்னைப் படிப்போர்க்குச் சைவசித்தாந்த சமயத்தின் கொள்கையைத் திரட்டிப் புகட்டத்தக்கதெனலாம். ஆதலால், இச்சிறு புத்தகப் பிரதி பள்ளிக்கூட மாணவர்கள் ஆசிரியர்களிடத்து மாத்திர மிருப்பதோ டமையாது, தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்த சைவசமயிகளெவர்வசத்தும் ஆவசியகம் இருக்கவேண்டியது, விலை அணு 4 (25 சதம்). பிரதிகள், ஆநந்த விலாசம் பிக்ஷாண்டார் கோயில், திரிசிராப்பள்ளி ஜில்லா, என்ற விலாசத்திற் பெறற்பாலன. இந்நூலகத்துள்ள "சைவ வாழ்க்கை" என்னும் விஷயம் இற்றைப் பிரசுரத்திற் பிறிதோரிடத்தில் வெளியிடப்பெற்றுள்ளது.

### சரித்திரபாடம்

மூன்றும், நான்காம், ஐந்தாம் புத்தகங்கள்

இப்புத்தகங்கள் அந்த அந்த வகுப்புக்களுக்கேற்ற முறையில் சரித்திர சம்பந்தமான படங்கள் விரவியனவாய், தெளிவான அட்சரங்களில் இலகுவான தமிழ் வசனநடையில் இயற்றி, பாடங்களின் இறுதிதோறும் அப்பியாசங்களும் சேர்த்து அச்சிடுவித்து வனப்பு வாய்ப்பக் கட்டப்பெற்று வெளிவந்துள்ளன இவற்றை எழுதி வெளியிட்டுள்ளவர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிற் சரித்திரபாட ஆசிரியராகக் கடமைபார்க்கும் திரு. ச. ஜயவீரசிங்கம் B. A. Hons) அவர்களாவர். இச்சரித்திர பாடங்கள் யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் ஏனைய பாகங்களிலுமுள்ள தமிழ் வித்தியாசாலைகள் கல்லூரிகளிற் பெரிதும் உபயோகிக்கப்பெற்று வருகின்றனவெனலாம். 3-ம்புத்தகம் விலை 60சதம் (10 அணு)' 4-ம் புத்தகம் விலை 80 சதம் (13 அணு); 5-ம் புத்தகம் ரூ 1.25 சதம். (ஒன்றேகால் ரூபா) பிரதிகள் யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் ஏனைய பட்டினங்களிலுமுள்ள பிரபல புத்தகசாலைகளிற் பெறற்பாலன.

எமது பார்வைக்கு உதவப்பட்ட மேற்படி பிரதிகளின்பொருட்டு ஆசிரியர்கட்கு நன்றி கூறுகின்றேம்.

## அரசியற் பரிபாலனம்

### சில புள்ளி விபரங்கள்

1938–39 ம் ஆண்டில் இலங்கையின் பரிபாலனச் செலவு 12 கோடி 70 லட்சம் ரூபா ஆனல் இந்த ஆண்டிற் பரிபாலனச் செலவு 44 கோடி ரூபா.

1938—39-ம் ஆண்டில் அரசாங்க உத்தியோகத்தரின் வேதனமாக 4 கோடி 50 லட்சம் ரூபா செலவானது. சென்ற வருஷம் இத்தொகை 9 கோடி 80 லட்சம் ரூபாவாக அதிகரித்தது. ஆனல் நடப்பு வருடத்தில் இத்தொகை 12 கோடியாக உயர்ந்துவிட்டது

யுத்தகாலப்படி என்று அரசாங்க உத்யோகத்தர் வேதனத்தில் மேலதிகமாக 1946—1947 ம் ஆண்டில் 5 கோடி 5[?] லட்சம் ரூபா செலவானது. நடப்பு வருடத்தில் இத்தொகை 8 கோடியே 80 லட்சம் ரூபாவாக உயர்ந்துவிட்டது.

1938—39-ம் ஆண்டில் பென்ஷனுக்கென 1 கோடியே 17 லட்சத்து 50ஆயிரம் ரூபா செலவானது. சென்ற வருஷம் இதன்பொருட்டு 1 கோடியே 75 லட்சம் ரூபா செலவழிக்கப்பட்டது. நடப்பு வருடத்தில் 2 கோடியே :0 லட்சம் ரூபா செலவாகுமாம்

சென்ற வருஷம் கல்வியின் பொருட்டு 6 கோடியே 50 லட்சம் ரூபா செலவானது. நடப்புவருடத்தில் இத்தொகை 8 கோடியே 60 லட்சம் ரூபாவாக உயர்ந்துவிட்டது.

உணவுப்பொருள் விநியோகத்தின் பொருட்டு அரசாங்கம் மாதந்தோறும் 1 கோடியே 20 லட்சம் ரூபா செலவழிக்கிறது

இந்தச் செலவுகளுக்கெல்லாம் பொதுவாக நடப்புவருடத்தில் 48 கோடியே 15 லட்சம் ரூபா வருமானம் கிடைக்கும்

நடப்பு வருடத்தில் செலவுக்கு மிஞ்சிய வரவு 5 கோடியே 70 லட்சம் ரூபாவாகும்.

இந்த விபரங்களை சேர் ஒலிவர் குணத்திலகா, சென்றவாரம் நிகழ்ந்த செனட்சபைக் கூட்டத்தில் தெரிவித்தார்

---

இலங்கையில் உள்ள பஸ், லோறி சொந்தக்கார் அனைவரும் தங்கள் லோறிகளிலும, பஸ்களிலும் பிப்ரவரி மாதம் 4 ந் திகதியன்று சிங்கக்கொடியைப் பறக்கவிடவேண்டுமென்று, அகில இலங்கை பஸ்லோறிச் சொந்தக்காரர் சங்கம் சென்றவாரம் ஓர் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது.

## தேகவியோகம்

### K. சுப்பையா அவர்கள்

வண்ணார்பண்ணை மேற்கு திரு, K. சுப்பையா அவர்கள் தம்மைச் சில நாட் பீடித்து வருத்திய நோய் காரணமாக நேற்று (19-1-48)மாலை வண்மேற்கில் (கொட்டடியில்) உள்ள தமது இல்லத்தில் தம்முடைய மக்கள்மருமக்கள் பௌத்திரர்முதலான சுற்றத்தார் புலம்ப அயலார் நண்பராயுள்ளார் கவலையுற இவ்வுலக வாழ்வையொருவினர்; இவருக்கு இறக்கும்போது வயது 80 யாழ்ப்பாணஞ் சைவப்பிரகாச யந்திரசாலை மனேஜராகக் கடமைபார்க்கும் திரு. S. P. கந்தையா அவர்கள், பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலையில் ஆசிரியராகவிருக்கும் திரு,கனகலிங்கம் B.Sc. அவர்கள், இலங்கை விவசாயப்பகுதி உத்தியோகத்தருளொருவராகிய திரு கதிரேசபிள்ளையவர்கள், கொழும்பு துறைமுகப் பகுதியிற் கடமையாற்றும் திரு. தில்லையம்பலமவர்கள், யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையிற் கடமை பார்க்கும் டக்ரர் C. குருசாமி (M.S அவர்களின் பாரியார், கொழும்பு நகரசங்கத்தில் உத்தியோகம் வகித்துவரும் திரு. A. தருமலிங்க மவர்களின் பாரியார். இவருடைய மக்களாவர்; கல்வி அறிவொழுக்கம் தெய்வபக்தி அபிமானம் பரோபகார சிந்தனை ஈகை முதலிய நற்குணங்களோடும் சற்கருமங்களோடுங் கூடியவர்; இவருடைய ஈமக் கடன்கள் இன்று பிற்பகல் 3 மணி வரையில் வண்மேற்கு வில்லூன்றி மயானத்தில் நிகழும். இவரது ஆன்மா சாந்தியடைக.

## தேகவியோகம

### திரு. ச. பரராஜசிங்கம்

நவாலியில் பிரபல குடும்பத்தைச் சேர்ந்த திரு ச. பரராஜசிங்கம் அவர்கள் இம்மாதம் 17-ம் திகதி சென்ற சனிக்கிழமை காலை காத்திராப்பிரகாரம் மார்படைப்பால் தேகவியோகமடைந்தார் என்பது கேள்வியுற்று மனம் வருந்துகிறோம். இவர் சண்டிலிப்பாயில் பெயர் பெற்று விளங்கிய வெற்றிவேலு முதலியாரின் வழித்தோன்றல் ஆவர். இவரின் பிதா திரு மூத்ததம்பியார் சண்முகம்பிள்ளை வெகுகாலம் பிரசித்த நொத்தாரிசுவாக கடமையாற்றி வந்தவர். திரு. பரராஜசிங்கம் அவர்கள் தம்மூரில் வெகு ஆண்டுகளாக விதானையார் உத்தியோகம் வகித்துவந்தவர். கல்வளை விநாயகர் ஆலயத்தின் தர்மகர்த்தாக்களில் ஒருவருமாவர். சைவத்துக்கும், சமூகத்துக்கும் ஆர்வத்துடன் தொண்டு செய்தவர் இவரின் ஈமக் கிரியைகள் அன்று பின்னேரம் இவரின் ஏகபுத்திரன் திரு. புண்ணியசிங்கம் அவர்களால் பெருந்திரளான உற்றார் ஊரவர்கள் சமூகத்தில் நிறைவேற்றப் பெற்றன. இவர் ஆன்மா சாந்தி அடைவதாக.

## சைவபரிபாலனசபை ஆச்சிரமநிதி

### பணம் உதவினோர் விபரம்

| | | | | |
|---|---|---|---|---|
| முன்கணக்குப்படி | 4039 50 | | | |
| K இராசா | 5 00 | | K M S மாணிக்கவாசகப்பிள்ளை | 25 00 |
| S A P மாரிமுத்துப்பிள்ளை | 25 00 | | V துரையப்பா | 5 00 |
| T சரவணமுத்து | 10 00 | | T திருச்சிற்றம்பலம் | 25 00 |
| S R செல்வத்துரை | 10 00 | | M செலவத்துரை | 25 00 |
| P K N கடை | 25 00 | | S தில்லையம்பலம் | 10 00 |
| S A கந்தையாச்செட்டி | 2 00 | | V வேலுப்பிள்ளை | 5 00 |
| P S L M | 15 00 | | S இரகுநாதன் | 10 00 |
| படமெடுக்கும்சாலை / பகாற்படம்பிடிக்கும்சாலை | 5 00 | | T குமாரசாமி | 10 00 |
| K இரத்தினம் | 10 00 | | A நல்லதம்பி | 10 00 |
| S அருணசலம் | 25 00 | | N நடராசா | 20 00 |
| K K சங்கரப்பிள்ளை | 5 00 | | S சண்முகம் | 50 00 |
| C S நமசிவாயம்பிள்ளை | 25 00 | | K சுந்தரப்பிள்ளை | 10 00 |
| M P N C பொன்னம்பலபிள்ளை | 20 00 | | A முத்துத்தம்பி | 10 00 |
| சீதாசோடாக்கொம்பனி | 25 00 | | | |

ஆகக் கூடியது 4461 50

16-1-48.

தி. இராசநாயகம்
தனதிகாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் வெற்றி

## அடிகளின் உபவாசமுடிவு

மகாத்மாகாந்தியடிகள் சென்றசெவ்வாய்க்கிழமை ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காகத் தாம் மேற்கொண்ட உபவாசத்தைச் சென்ற ஞாயிற்றுக்கிழமை மத்தியானம் நிறுத்திக்கொண்டார்

இந்தியத் தலைவர்களான பண்டிதர் நேரு, சர்தார் படேல், சர்தார் பல்தேவ்சிங், பாகிஸ்தான் கைகொமிஷனர், ஹைதராபாத் நிசாமின் பிரதிநிதி: முஸ்லீம தலைவர்கள் அடிகளைச் சந்தித்து, தாங்கள் எல்லாரும், ஹிந்து-முஸலிம ஒற்றுமையை வளர்க்கும விஷயத்தில், எவ்வித மனத்தடங்கலுமின்றி ஒத்துழைப்பதாக உத்தரவாதம் அளித்தனர். அடிகளின் உபவாசம் ஏற்பட்ட நாள்தொடக்கம், இந்தியா எங்ஙனும் வகுப்புச்சமரசம் நிலவியது. கராச்சியிலே, பாகிஸ்தான் தலைப்பட்டினத்திலே சில முஸ்லிம் குண்டர்கள் ஹிந்துக்களையும் சீக்கியர்களையும் சித்திரவதை செய்தனர் சின்னுட்களுக்குமுன் அதன்பயனுக, இந்தியாவிலே ஹிந்துக்களும் சீக்கியரும வீறுகொண்டெழுந்து, முஸ்லிம்களைப் பூண்டோடு களைந்துவிடுவரோ என்றும் அஞ்சவேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஆனுல் அடிகளின் உபவாசத்தில் அத்தகைய நிலைமை ஏற்படவில்லை. நேர்மாமுக உலகம் உஜ்ஜீவிக்க உத்தமரின் ஆருயிரா அகிம்சாமூர்த்தியின் திவ்விய உயிரை, தியாகமூர்த்தியின் ஆருயிரை எவ்வாறு காப்பாற்றலாம் என்பதில் ஹிந்துக்களும், சீக்கியரும், முஸ்லீம்களும், கிறீஸ்தவர்களும் தோளோடுதோள் சேர்ந்து தொண்டாற்றினர். இந்தியா எங்கணும், அடிகளின் உயிரைக் காப்பாற்ற தேவாலயங்களிலும், மசூதிகளிலும், சீக்கியரின் ஆலயங்களிலும் பிரார்த்தனைகள் நடந்தன. பாகிஸ்தான் அதிகாரிகள் அடிகளின் தேகநிலைமைபற்றி அடிக்கடி விசாரித்துக் கவலை தெரிவித்தனர்.

புதுடெல்கியில் 3 லட்சம் பேரின் சீக்கியர், முஸ்லிம்கள், ஹிந்துக்கள் கைச்சாத்துக்கொண்ட ஓர் மநு அடிகளுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அங்கே ஓர் சீக்கியர் ஓர் பெரியதாங்கிநிறையத் தண்ணீர் வைத்து, "ஐயன்மீர், ஹிந்துக்கள் முஸ்லீம்களுக்கும், முஸ்லீம்கள் ஹிந்துக்கள் சிக்கியர்களுக்கும் இந்தத் தண்ணீரை அள்ளிக்கொடுங்கள், சமூக ஒற்றுமையை வளருங்கள்" என்றூர். பாரதவர்சம் எங்கும் சமூக ஒற்றுமை நிலவியது.

பாகிஸ்தானுக்குச் சேரவேண்டிய 55 கோடி ரூபாவையும் இந்திய அரசாங்கம் கொடுக்கத் தீர்மானித்துவிட்டது. பாகிஸ்தான் எந்த அக்கிரமத்தைச் செய்தாலும், அன்பின்வழியாக அதனை நல்வழிக்குக்கொண்டுவருவோம் என்ற அடிகளின் உபதேசத்தைக் கடைப்பிடித்தே இந்திய அரசாங்கம் இந்தத் தாராளமனப்பான்மையைக் காட்டியுள்ளது.

ஐக்கியதேச ஸ்தாபனத்திலும், காஸ்மீரப் பிரச்னையை, இந்தியாவும் பாகிஸ்தானும் தமக்குள்ளே தீர்த்து ஓர் சமரசத்துக்குவர ஷை ஸ்தாபனத்துப்பாதுகாப்புச் சபை தவணைகொடுத்திருக்கிறது


இதுவரை இவ்விஷயமாக ஓர் முடிவு வந்திருக்கவேண்டும்.

அரசியல்வாதிகளாலும், ராணுவத்தளபதிகளாலும் தீர்க்கமுடியாத ஓர் பெரிய பிரச்னையை மகாத்மா-அஹிம்சாமூர்த்தி-பொக்கைவாய்க்கிழவர், ஆறே ஆறுநாட்களில் தீர்த்துவிட்டார்.

## அரிசி நிலை

இப்போதுள்ள அரிசி விநியோக அளவை ஆள் ஒருவுக்கு வாரத்தில் 3¼ படி ஆக்குவது என்றல் கிழமை தோறும் 35,000 தோன் அரிசி இலங்கைக்குத் தேவைப்படும். ஆனுல் அப்படியாகப் பெருந்தொகை அரிசி இலங்கைக்குக் கிடைக்கமாட்டாது. இந்த ஆண்டின் முதலாவது மாதத்துக்கும் இலங்கை தென்கிழக்கு ஆசிய அதிகார பீடத்தின் அநுமதிப்படிக்கு 185,000 தோன் அரிசியைத்தான் பெறும்.

சென்றவருஷம் பாக்கியாயிருந்த 22,000 தோன் அரிசி, பிரேஸிலிலிருந்து இலங்கைக்குக் கிடைக்கவேண்டியிருக்கிறது.



# கல்விமந்திரியின் சிரத்தை

## வித்தியாசாலை அபிவிருத்தியிற் புதியதிட்டம்

16 வருஷ காலமாக மிஸ்ரர் வி. டபிள்யூ டபிள்யூ கன்னங்கரா கல்வி மந்திரியாக இருந்து கல்வியின் பெயரால் கோடிக்கணக்கான ரூபாய்களை வீண்விரயஞ் செய்துவிட்டார். தேவையற்ற இடங்களில் அரசாங்க மத்திய பாடசாலைகளை நிறுவி, அவற்றுக்குப் போதிய ஆசிரியரை உதவாமல், போதிய தளவாடங்களைக்கொடுக்காமல், இந்த வித்தியாசாலை அபிவிருத்தி விஷயத்தை ஓர் விகடநாடகமாக்கிவிட்டார். சிலகாலத்துக்கு முன், ஓர் ஆசிரியர் ஓர் அரசாங்க மத்தியபாடசாலைப் பிரதமாசிரியர் பதவிக்கு மநுச்செய்தாராம், அவரைக் குறித்த மத்தியபாடசாலைக்கு நியமித்தாய்விட்டது என்றும் போய்ப் பதவியேற்கும்படியும் அவர்க்கு மறுமொழி கிடைத்தது. இவர் குறித்த தலத்துக்குச் சென்று பார்த்ததும் அங்கே பாடசாலையில்லை. அவர் உடனே தமது வித்தியாபகுதி யதிகாரிகளுக்கு அறிவித்தாராம் அந்த வித்தியாபகுதி யதிகாரிகளும் தமக்குக் குறித்த பள்ளிக்கூடம் எங்கேயிருக்கிறதென்று தெரியாதென்றூர்களாம். இந்த விபரத்தை, சாவகச்சேரிப் பிரதிநிதி திரு. வி. குமாரசாமி பாராளுமன்றத்திற் குறிப்பிட்டுக் காட்டினுர். வேனைய அங்கத்தவர்களும் வித்தியாசாலைகள் விஷேமாக நிகழும ஊழல்களைச் சிலகாலமாக எடுத்துரைக்கலாயினர். புதிய கல்விமந்திரி மிஸ்ரர் ஈ.ஏ. நுகவெலை இந்தக் குறைகளை எல்லாம் நிவிர்த்திசெய்வதாக வாக்களித்தார்.

இப்போது கலவி மந்திரி ஓர் திட்டம் வகுத்திருக்கிருர். உண்மையில் தேவையான இடஙகளில்தான் பள்ளிக்கூடங்களை நிறுவவும். தேவையற்ற இடங்களில் உள்ள வித்தியாசாலைகளை அகற்றவும் அவர் ஒழுங்குசெய்துள்ளார். இதற்கு ஆரம்பமாக அவர் தமது காரியாலயத்தில் ஓர் இலங்கைப்படம் தயாரித்து வைத்திருக்கிருர். அப்படத்தில் இலங்கை 95 தேர்தற்றெகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இப்படிப் பிரிக்கப்பட்டுள்ள பகுதிகளில் இருக்கும் வித்தியாசாலை விபரங்கள் அப்படத்திற் காட்டப்பட்டிருக்கின்றன.

கல்விமந்திரி, பாராளுமன்றத்து அங்கத்தவர்களின் ஒத்துழைப்பை இவ்விஷயத்தில் நாடுகிருர். அவர் தம்மிடம் பாராளுமன்ற அங்கத்தவர்களை அழைத்து, குறித்த படத்தைக்காட்டி, எந்த எந்த இடங்களில், இனிப் பள்ளிக்கூடங்கள் அமைக்கப்படவேண்டும் எந்த எந்த இடஙகளில் இருக்கும் பள்ளிக்கூடங்களை அகற்றவேண்டுமென்று, அப்பிரதிநிதிகளின் ஆலோசனைகளைக் கேட்டு வருகிருர், பிரதிநிதிகள், இன்ன இன்ன

தொடர்ச்சி 4-ம் பக்கம்

---

## காந்தி அடிகள் வாழப் பரம்பொருளாகிய முருகனை வேண்டல்

( க. இ. )

சாதிகுலம் பிறப்பிறப்புப் பந்தமுத்தி
  ஏதுமின்றி எவ்வுயிர்க்கு முயிராயுள்ள
ஆதிபரம் பொருளைபாம் அர்ச்சித்தேற்றி
  அவனருளை ஆர்வமுடன் வேண்டுவோமால்
சாதிமதச் சண்டையின்றிச் சாந்தமுற்றே
  சகோதரராய்த் தந்நாட்டார் வாழும்வண்ணம்
நீதிநெறி நின்றொளிரும் நிமலன் காந்தி
  நோற்றதவம் நீணிலத்தில் வெல்கவென்றே

வேறு

ஒருவயிற்றிற் பிறவாது உதித்தருளி
  உலகவுயி ரனைத்துங் காக்கும்
முருகவேள் திருநாமம் முப்போதும்
  மலர்தூவி இறைஞ்சுவோமால்
இருமதத்தைச் சார்ந்தோரும் இம்சையின்றி
  இணங்கியிடும் இன்ப வாழ்வைக்
கருதியின்று உபவாசங் காக்குமெங்கள்
  காந்திமஹான் நீடூழி வாழ்கவென்றே.

---

# சிங்கக்கொடிப் பிரச்சினை

## ஜீ. ஜீ. யின் உருக்கமான பேச்சு

வாளேந்திய சிங்கக்கொடியையே இலங்கையின் தேசியக்கொடியாக நிர்மாணிக்கவேண்டுமென்று மட்டக்களப்புப் பிரதிநிதி ஜனுப் ஏ. சின்னலெப்பை எடுத்தாண்ட தீர்மானம் சென்ற வெள்ளிக்கிழமை எத்தகைய முடிவும் இல்லாமல் விவாதிக்கப்பட்டது.

ஜனுப் சின்னலெப்பையின் தீர்மானத்துக்குத் திருத்தமாகத் தமிழ்க்காங்கிரஸ் அங்கத்தவர் திரு. எஸ் ஜே வீ. செல்வநாயகம் ஓர் பிரேரணையை எடுத்தாண்டார். சிங்கக்கொடி இலங்கை முழுவதுக்கும் செல்லுபடியாகமாட்டாது, ஆகவே இங்குள்ள மூன்று சமூகத்தார்க்கும் வெவ்வேருக மூன்று கொடிகள் அமைக்கவேண்டும். சிங்களர்க்குச் சிங்கக்கொடி தமிழர்க்கு இடபக்கொடி (நந்திக்கொடி) முஸ்லிம்களுக்கு பிறைக்கொடியாக மூன்று கொடிகள் நிர்மாணிக்கவேண்டும் என்பதே ஸ்ரீசெல்வநாயகத்தின் திருத்தப்பிரேரணை.

கோப்பாய்ப் பிரதிநிதி திரு. வி. வன்னியசிங்கம் இன்னேர் திருத்தப்பிரேரணையை எடுத்தாண்டார். இலங்கையின் தேசியக்கொடி காவி, சிகப்பு, வெள்ளை என்னும் மூவர்ணங்களைக் கொண்டதாய், சிகப்பு நிறப்பக்கத்தில் மஞ்சள்நிறச் சிங்கத்தைப் பொறிக்கப்பட்டதாக இருக்கவேண்டுமென்பதே திரு. வன்னியசிங்கத்தின் பிரேரணை.

வர்த்தக மந்திரி திரு வி சுந்தரலிங்கம் இன்னேர் திருத்தப் பிரேரணையை எடுத்தாண்டார். வாளேந்திய சிங்கக்கொடியில் மேலே காவிநிறக்கோடும், கீழே வெள்ளைநிறக்கோடும் இருக்கவேண்டும் என்று ... ஞர். அவர் தீர்மானத்தின் மீதும் ... திருத்தப்பிரேரணைகள்மீதும் விவாதம் நடந்தது

இவ் விவாதத்தின்போது, திரு. ஜீஜீ பொன்னம்பலத்தின் பிரசாரணமே மிகச் சிறந்ததாயிருந்தது என்று கொழும்பு ஒப்சேர்வர் பத்திரிகையின் நிருபர் தெரிவிக்கிருர். திரு. பொன்னம்பலம் பின்வருமாறு கூறினுர்.

'நான் எம் தமிழ்மக்களின் பிரதிநிதியாகச் சென்ற அரசாங்கசபையிலும் இந்தப் பாராளுமன்றத்திலும் இருந்து சென்ற 16 ஆண்டுகாலமாகத் தொண்டாற்றி வந்திருக்கிறேன் என் தமிழ்ச் சகோதரர்களின் தலைவன் என்ற கௌரவத்தையும் இந்தச்சிரமேற்பெற்று இந்தச்சபையிலும் முந்திய அரசாங்கசபையிலும் நான் பணிசெய்திருக்கிறேன் நான் பல சந்தர்ப்பஙகளில், பலவிஷயங்களில் அதிகாரவர்க்கத்தை எதிர்த்துமிருக்கிறேன. ஆனுல் இன்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் அடையும் மனவேதனைபோல மனக்கிளர்ச்சியைப்போல மனத்தாங்கலைப்போல, முன்னொருபோதும் அடையவில்லை. இதுவோர் சாமானியமான விஷயமல்ல. ஓர் தேசியக்கொடி யமைப்பு விஷயத்திலே, நாம் மிகவும் சாவதானமாக இருக்கவேண்டும் இந்தப் பிரதிநிதிகள்சபை தனக்குள்ளே தெரிந்தெடுக்கும் ஓர் சபையிடம் இந்தப் பிரச்னையைச் சமர்ப்பிக்க, அச்சபையினர் இப்படியான விஷயங்களில் அநுபவமுடையாரின் ஆலோசனைகளைக் கேட்டு ஆவன செய்தற்கு, இடம் அளிக்கப்படும் என நான் நம்பியிருந்தேன். இது விஷயத்தில் எங்களுக்குள்ளே அபிப்பிராயபேதம் இருக்கக்கூடாது. எல்லாம் ஒற்றுமையாய்ப் போகவேண்டும் என்ற அவாவினுல் நேற்றுக்காலை வரை எதிர்க்கட்சியில் (அரசாங்கக்கட்சி) உள்ளவர்களுடன் ஓர் சமரசத்துக்குவர என்னுலான முயற்சி செய்தேன், ஆனுல் என் முயற்சிகள் யாவும் பிரதிகூலமடைந்தன.

"ஐயா, இது தேசீயக்கொடியல்ல, இன்று அதிகாரம் வகிக்கும் கட்சியின் கொடியே இது.

',இன்று அதிகாரம் வகிக்கும் பெரும்பான்மைக்கட்சியினரை நான் கேட்டுக்கொள்வது இதுதான், கோபம் குறுகிய மனப்பான்மையைக் காட்டுவதற்கு இது காலம் அல்ல. கண்ணிய விவேகத்தையும், சிறந்த இராசதந்திரத்தையும் இந்தச் சந்தர்ப்பத்திற் காட்டி எல்லா மக்களது ஒத்துழைப்பையும் அநுதாபத்தையும் பெரும்பான்மைக் கட்சியினர் சம்பாதிக்க ஓர் அரிய சந்தர்ப்பமாக இருக்கிறது. நாம் எவ்வளவுக்கு விட்டுக்கொடுக்கமுடியுமோ, அவ்வளவுக்கும் விட்டுக்கொடுத திருக்கிறோம்.

"மிஸ்ரர் குணசிஙகா, சிறுபான்மையினர் தாராளமனப்பான்மையுடன் நடக்கவேண்டும் என்றும் இவ்விஷயத்தில் ஒத்துழைக்கவேண்டுமென்றும் மிஸ்ரர் குணசிஙகா கூறினுர். அவரின் கூற்றை யிட்டு அழுவதா, அல்லது சிரிப்பதா என்று விளங்கவில்லை. கணக்கன் கணக்கறிவான், தன்கணக்கைத் தானறியான் என்றபடியிருக்கிறது மிஸ்ரர் குணசிஙகாவின் கூற்று.

'இன்று நீங்கள் சுதந்திரம் பேசுகிறீர்கள், சுதந்திரம் வந்துவிட்டதென்கிறீர்கள், 'எங்கும் சுதந்திரமென்பதேபேச்சு எல்லாரும் சமமென்பதுறுதியாச்சு' என்றும் பரக்கப் பேசுகிறீர்கள். ஆனுல் உங்கள் நடவடிக்கையைப் பார்க்குமளவில், 'இது சுதந்திரமல்ல, ஒரு எசமான் போக, இன்னேர் எசமானுக்கு நாம் அடிமைப்படப்போகிறோம்' என்று ஓர் பகுதி மக்கள் எண்ணும்படியான நிலைமையை உண்டாக்க எத்தனிக்கிறீர்கள்.'

மிஸ்ரர் வில்மற் பெரேரா, மிஸ்ரர் பிலிப் குணவர்த்தன, ஜனுப்ஜயா, (தொழில் மந்திரி) முதலியோர் சிங்கக்கொடியே தேசீயக்கொடியாவதை ஆட்சேபித்துப் பேசினர். முடிவில், நேரமின்மையால் விவாதம் தவணையிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சி ரேடியோ

புதன் ஜனவரி 21

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 கே. ஜி. சிவன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 ரேடியோ வாத்திய கோஷடி 8 30 காஞ்சீவரம் பி. ஞானசுந்தரம் பாட்டு 9 முடிவு,

1 கதம்பம் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 கே ஜி சிவன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 கே ஜி சிவன் பாட்டு 2 15 கல்விஒலிபரப்பு 2 45 முடிவு

மாலை 5 லால்குடி ஆர் நீலமேகம்பிள்ளை வயலின் 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 போனமச்சான் நாடகம் 7 15 ராணுவத்திலிருந்து திரும்பியவருக்கு வசதிகள் 730 தமிழில் செய்திகள் 7 45 மதராவில உள்ளபடி 8 காஞ்சீவரம் பி ஞானசுந்தரம் பாட்டு 8 30 லால்குடி ஆர் நீலமேகம் பிள்ளை வயலின் 9ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 குரல்வகை இசைத் தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 வாத்ய இசை 10 இசைவேளை (இசைத்தட்டு) 10 30 முடிவு.

வியாழன் ஜன 22

காலை 7 15 கீதாரம்பம் இசைத்தட்டு 7 20 தமிழில் செய்திகள் 7 30 அயலூர் ஆர் கிருஷ்ணன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 காலை இசை (இசைத் தட்டு) 8 30 ஆர் வி சுந்தரம் ஐயர் வீணை 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 பெண்ணுலகம் 2 தமிழில் செய்திகள் 2 05 கும்மி 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 அயிலூர் ஆர் கிருஷ்ணன் பாட்டு 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் இசைத் தட்டு 7 30 தமிழில் செய்திகள் 7 45 சீகாழி கே சதாசிவம்பிள்ளை பாட்டு 9 ஆங்கிலத்தில்செய்திகள் 9 15 குரல்வகை இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 ஆர் வி சுந்தரம் ஐயர் வீணை 10 30 முடிவு.

வெள்ளி ஜன 23

காலை 7 15 கீதாரம்பம் இசைத்தட்டு 7 20 தமிழில் செய்திகள் 7 30 டி கே பாலகிருஷ்ண ஐயங்கார் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 திருச்சி வாத்ய கோஷ்டி 8 30 திருச்சி பி ஆர் ராமசாமி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 டி கே பாலகிருஷ்ண ஐயங்கார் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 டி கே பாலகிருஷ்ண ஐயங்கார் பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 ஒலிபரப்பு முடிவு

மாலை 5 சீதாமணி ஸ்ரீனிவாசன்பாட்டு 5 40 துரான் ஷரீப் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 நாகபட்டணம் பி எல் ஜி எம் சிவசுப்பிரமணியம் சகோதரர்கள் நாகஸ்வரம் 7 30 தமிழில்செய்திகள் 7 45 நகைச்சுவை வேண்டும் 8 சீதாமணி ஸ்ரீநிவாசன் பாட்டு 8 30 நாகபட்டணம் பி எல் ஜி எம் சிவசுப்பிரமணியம் சகோதரர்கள் நாகஸ்வரம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 அன்று வந்த கடிதம் 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 குரல்வகை இசைததட்டு 10 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 10 30 முடிவு.

## சைவ வாழ்க்கை

1-ம் பக்கத் தொடர்ச்சி

மதுவை உண்ணமாட்டோம், உயிர்ப்பலி செய்யமாட்டோம்" என்று சத்தியம் செய்து தினமும் பத்திரிகைகள் மூலமாகப் பிரசிதம் செய்கின்றார்கள். முனியாண்டி, காளி, காட்டேறியாகிய தேவதைகளை வணங்குபவர்கள் மதுவையும் உயிர்ப்பலியையும் அறவே ஒழிக்க, அறிவாளிகளாகிய யாழ்ப்பாணத்தவர் அதற்கு மாறாகச் செய்து நரகில் மூழ்வது தகுதியாகுமா?

சமய அறிவும் கடவுள் பக்தியும் உள்ளவர்களே ஆலயங்களுக்கு அதிகாரிகளாக யிருக்கவேண்டும். அத்தன்மையோர் யாழ்ப்பாணத்திலுள்ள அதிகாரிகளாக யிருப்பார்களாகில் தங்களின் ஆலயங்களில் ஆடு, கோழி பலியிட உடன்படமாட்டார்கள் அன்பே சிவமாகும். அன்புடையார் நல்நெஞ்சராவரோ!

யாழ்ப்பாணத்தவரைக் கல்விமான்களென்றும், விவேகிகளென்றும், சமயப்பற்றுடையவர்களென்றும், பக்திமான்களென்றும, அன்புடையாரென்றும் சகல தேசத்தவர்களும் கூறுவர். இவ் விசேஷமான குணமுடையோர் தங்களிலும் பார்க்க தாழ்ந்த நிலையிலிருக்கும் தோட்டக் கூலியாட்கள் போன்று சத்தியத்தைக் கைப்பிடித்து பத்திரிகைகளில் பிரசுரித்து ஜீவ[illegible] பதம் அடைவா[illegible]

## கல்வி மந்திரியின் சிரத்தை

3-ம் பக்கத் தொடர்ச்சி

இடங்களில்தான் வித்தியாசாலைகள் அமைக்கப்படவேண்டும் என்று தத்தம் தொகுதித் தேவைகளை மந்திரிக்குக் குறிப்பிட்டுக்காட்டி தனித்தனி அறிக்கை சமர்ப்பிப்பர். அவ்வறிக்கைகளை மந்திரி, கல்விப்பகுதி யதிகாரிகளுக்குச் சமர்ப்பிப்பர். அவ்வதிகாரிகள் அவ்வறிக்கைகளை ஆராய்ந்து தமது அபிப்பிராயத்தைக் கூறுவர். பின்னர் மந்திரி, அந்த அறிக்கையை வைத்துக்கொண்டு குறித்த ஓர் தொகுக்குரிய பிரதிநிதியை வரவழைத்து அவருடன் மீண்டும் ஆலோசனை புரிந்து புதுப்பள்ளிக்கூடங்கள் கட்டுவது. அல்லது இருக்கும் பள்ளிக்கூடங்களை நீக்குவதுபற்றி ஓர் முடிவு செய்வார்.

மிஸ்ரர் நுகவெலையின் இந்த முயற்சியைப் பாராளுமன்றத்து அங்கத்தவர்கள் மிகவும் பாராட்டுகின்றனர்

பள்ளிக்கூடங்கள் கட்டும் விஷயமாக ஏற்படும் செலவுகள் பற்றியும் மிஸ்ரர் நுகவெல பிரதிநிதிகளுடன் ஆலோசனை புரிந்து வருகிறார். இப்போது அரசாங்க வித்தியாசாலைக் கட்டிடங்கள் பகிரங்க வேலைப்பகுதியினரால் கட்டப்பட்டுவருகின்றன. இதனால் பெருந்தொகையான செலவு கட்டிடங்களின் பொருட்டு ஏற்படுகின்றன வென்றும், இச்செலவில் ஒரு பகுதியுடனேயே அப்பள்ளிக்கூடங்களை மிகவும் மலிவாகக் கட்டிமுடிக்கலாம் என்றும் பிரதிநிதிகள் பலர் கல்விமந்திரிக்கு கூறியுள்ளனர். அரசாங்கப் பள்ளிக்கூடங்களைக் கட்டும் பொறுப்பை அந்த அந்த ஊரவர்களில் விடுத்து, வேண்டிய செலவை அரசாங்கம் பொறுத்துக்கொள்வது சாலச்சிறந்ததென்று கல்விமந்திரி கருதுவதாகத் தெரிகிறது. அப்படிச் செய்தால் ஊரவரே அபிமானம்கொண்டு சிறந்த கட்டிடங்களைத் தங்களின் சொந்த நன்மைகருதிக் கட்டிமுடிப்பர் என்று கல்விமந்திரி கருதுகிறார்.

தளபாடங்கள் விஷயமாகவும், கல்விமந்திரி இத்தகையதோர் கொள்கையையே கொண்டிருக்கிறார் எனத் தெரியவருகிறது இயலுமானவரை, ஓர் பள்ளிக்கூடம் நிறுவப்படும் அந்த ஊரிலேயே, அப்பள்ளிக்கூடத்துக்கு வேண்டிய வாங்கு. மேசை, கரும்பலகை, கதிரைமுதலிய தளபாடங்களைச் செய்விக்க வேண்டும் அப்படியான வசதிகள் இல்லாத பட்சத்தில், பட்டினங்களின் மத்தியபாகத்தில் ஒவ்வோர் தொழிற்சாலையை நிறுவி அதன் மூலம் அந்த மாகாணத்தில் இருக்கும் பள்ளிக்கூடங்களுக்கு வேண்டிய தளபாடங்களை உதவவேண்டும் என்றும் கல்வி மந்திரி கருதுகிறார். அரசாங்கக் கைத்தொழிற்பகுதியர் ஓர் மாகாணத்தின் தலைபட்டினத்தில் ஓர் தளபாடத் தொழிற்சாலையை நிறுவ, அதற்கு வேண்டிய மரங்களைக் காட்டுப்பகுதியினர்உதவ அத்தொழிற்சாலையிலிருந்து வேண்டிய தளபாடங்களை அரசாங்க ஏசன்ட் மூலமாகப் பள்ளிக்கூடங்களுக்கு உதவுவதும் மந்திரியின் ஓர் திட்டமாகும்.

எந்தத்திட்டத்தை வகுத்தாலும், கல்வி மந்திரி ஜனப்பிரதிநிதிகளின் அநுசரணையுடனேயே அதனை அமுல்நடத்துவார்.


## விற்பனவு விளம்பரம்

ஓர் வக்கிக் காத்தையும் (Buggy Cart) வடக்கன் மாடும் விற்பனவுக் கிருக்கின்றன. தேவையானோர் கீழ்க்கண்ட விலாசக் காரரிடம் அறிந்து கொள்ளலாம்.

V. J. அரியநாயகம்,

தெல்லிப்பழை, 16-1-48.



குகமயம்

## ஓர் வேண்டுகோள்

அன்புடையீர்!

புண்ணிய பூமியாகிய கதிர்காம க்ஷேத்திரத்தில் கதிரமலை யென்னும் சன்னிதான 'தேஜோமயானந்த சாந்தி'' சங்கஸ்தாபனத்தை உண்டுபண்ணியவரும் அதன்பால் பலவருடங்களாக தண்ணீர்ப்பந்தல் அடிமையுருத்துடையவருமான காலஞ்சென்ற "கண்டகோடரி சுவாமி'' என்னும் திருநாமம் விளங்கிய ஸ்ரீ ரமணசங்குசாது அடியாரின் கைங்கரியங்களைப் பின்பற்றி பல பெரும் அபிமானிகளின் ஆராதனைக்கிணங்கி செவ்வனே இவ்வரும்பெரும் தர்ம கைங்கரியத்தை நடாத்த ஒப்புக்கொண்டவருமான அடியேன் சாது சங்கரப்பிள்ளை முருகேசு, இதேவித அடிமைகளை சென்ற 17 வருஷக் காலமாக செல்வக் கதிர்காம றேட்டிலும் பல இடங்களிலும் திருப்திகரமாக ஒப்பேற்றி நடாத்தி வந்தும், மேற்சொல்லிய பெரியாரின் தொண்டுகளை ஆட்சேபனையின்றி நடாத்த உரிமைபெற்று அடியேன் லோகாபிமானிகளாகிய உங்களாதரவை என் முன்னேற்றத்திற் கிணங்க எவ்வாறு முன்னும் கிரயங்கள் பெற்றும் அதற்குரிய பற்றுச்சீட்டு உரிமை அளித்தும் நடத்திவந்தேனே அதேபோல் மேற்சொல்லிய கதிரமலை ஸ்தாபன விஷயங்களை அவ்வவ்வாறு நடத்துவேனென்றும் இத்தாற் சகலருக்கும் இவ்வறிவித்தல் மூலமாய்ப் பிரசுரம்பண்ணி அறியத் தருகிறேன் இங்ஙனம்,

Mis 229 20, 27, 3-2-48. சாது ச. மு.



## இலக்கிய வாசகம்

மூன்றும் புத்தகம்

நான்காந்தரத்துப் பிள்ளைகட்கு உபபாடமாகவுள்ளது

(புதுக்கிய இரண்டாம் பதிப்பு)

இதன் வசனபாகம்

சத்தியவிரதம்பூண்ட அரிச்சந்திரமகாராசனுடைய வரலாறு இலகுவான இனிய செந்தமிழ்வசனநடையில் 18பாடங்களாக வகுத்தெழுப்பட்டுளது

செய்யுட் பாகம்

பஞ்சதந்திரத்தில் காக்கை ஒட்டகத்தை வஞ்சித்த கதைச்செய்யுள் நீதிக்கவித் திரட்டு, சதகத் திரட்டு என்னு மிவைகள் அடங்கி யுள்ளன.

பிரதியின் ஈற்றில் அரும்பத விளக்கம், செய்யுட் பாடவுரை என்னுமிவைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

பிரதி ஒன்று விலை சதம் 60 (அறு 10)

இங்குள்ள பிரபல புத்தகசாலைகளிலும் பெறற்பாலன

மனேஜர், சைவப்பிரகாச யந்திரசாலை

யாழ்ப்பாணம்



விளம்பரமின்றேல் பெரும்பணமில்லை



கலாவல்லி புத்தகசாலை

( இந்துக்கல்லூரிக்கு அணித்தாக )

வண்ணார்பண்ணை

இங்கே தமிழ் ஆங்கில வித்தியாசாலை கல்லூரிகளின் மாணவர்களுக்காகிய சகல ஆங்கில தமிழ்ப் புத்தகங்கள், கோப்பி, பேனை பென்சில்கள், வரைதற்காகிய உபகரணங்கள், தினவரவு டாப்புக்கள் முதலியவைகளும், இலக்கண இலக்கிய புராண இதிகாசங்களும், கற்பலகைகள், 'வூல்ஸ்காப்' முதலிய கடதாசி வகைகள் இன்னும் ஆகவேண்டியவைகளெல்லாம் சகாயமான விலைக்குக் கொடுக்கப்படும்.

M 225 16 20



## கிருஷ்ணன் தூது

சருக்கவுரை

வில்லிபாரதம்—உத்தியோக பருவத்துள்ளதாகிய கிருஷ்ணன் றூது சருக்கம், பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதிய பொழிப்புரை, சரித்திரத்தொடர்பு, நூலாசிரியர்வரலாறு என்னுமிவற்றுடன் யாழ்ப்பாணம் நாவலர் கலாசாலைத் தலைமையாசிரியர் வித்துவான் ந சுப்பையபிள்ளை யவர்கள் எழுதிய விசேடக் குறிப்புரையுஞ் சேர்த்து ஐந்தாம் பதிப்பாக அச்சிட்டு வெளிவந்துளது; இச்சருக்கத்திற்சிலபாகம் இப்பொழுதுதமிழ் ஆங்கில எஸ். எஸ். ஸீ பரீட்சைக்குப் பாடமாக விதிக்கப்பட்டுள்ளன

விலை 1 ரூபா 75 சதம் (ரூபா 1 அறு 12)

மனேஜர், சைவப்பிரகாச யந்திரசாலை

வண்ணார்பண்ணை :: யாழ்ப்பாணம்

20—10—47.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# முதலாளித்துவ அரசாங்கம்

## இலங்கையில் இன்றைய அரசியல்

இன்று இலங்கையில் அதிகார வர்க்கம் வகித்துள்ள கட்சி உண்மையில் பொதுமக்களின் பிரதிநிதித்துவமுடையதாக இல்லை. அது தன்னைப் பாதுகாத்துக்கொள்ளுதற்காக, தன்பக்கம் ஆட்களை இழுப்பதற்காகப் பட்டம் பதவிகளை அள்ளி வழங்குகிறது. பொதுப்பணத்தை வீண் விரயம் செய்கிறது. இப்படியெல்லாம் செய்தும், இந்தக் கட்சி அதிக நாட்களுக்கு அதிகாரத்தில் இருக்கப் போவதில்லை. பொது ஜனங்கள், இந்த டம்பாச்சாரி நாடகத்தின் உண்மைத் தன்மையைக் காணத் தொடங்கிவிட்டனர். பொது ஜனக் கிளர்ச்சிக்கு முன்னால், இன்றைய அதிகாரவர்க்கம் சுக்கல் சுக்கலாய் நொருங்கிவிடும் காலம் தூரத்தில் இல்லை என்றிவ்வாறு சென்ற செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நிகழ்ந்த ஓர் கூட்டத்தில் இலங்கைச் சமதர்மக் கட்சித் தலைவர் டக்ரர் எஸ். ஏ. விக்கிரமசிங்க கூறினார்.

ஸ்ரீ என் சிவபாதசுந்தரம் தலைமை வகித்தார். டக்ரர் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்ததாவது:—

“இங்கிலாந்திலே ஓர் தொழிற் கட்சி யரசாங்கம் இருக்கிறது. அங்கே அவர்கள் செய்வது என்ன? நாட்டில் இருக்கிற சீமெந்து, கல்லு முதலாம் வீடுகட்டும் உபகரணங்களைச் சேகரித்து, மாதம் ஒன்றுக்கு 15,000 வீடுகள் விகிதம் தொழிலாளர்க்கு இல்லங்கள் அமைப்பதில் தம் கவனத்தைச் செலுத்துகின்றனர். ஆனால் இந்த இலங்கையில் தொழிலாளர் வீடுகளுக்கு வழியற்றுத் தவிக்கும் இக்காலத்திலே, குதிரைப் பந்தய மைதானம் திருத்துவதிலும், பிரதமர்க்கு மாடமாளிகை கட்டுவதிலும் அரசாங்கம் தன் கவனத்தைச் செலுத்துகின்றது

“இன்று இலங்கைக்குச் சுயராச்சியம் கிடைத்துவிட்டதாம். எதற்குச் சுதந்திரம்? மோட்டார்க் கார்கள் தாராளமாக இறக்குமதியாவதற்கும், கேவலம் புலநுகர்ச்சிப் பொருள்களை இறக்குமதி செய்வதற்குமே சுதந்திரம்! இந்த நாட்டிலே ஆவசியகம் வேண்டற்பாலதாகிய நெசவுத் தொழிற்சாலை போன்றதாகிய நிலையங்களை நிறுவுதற்கு இப்பணம் செலவிடப்பட்டிருக்கலாம்.

“பஸ் முதலாளியார், பெரிய ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகர், தோட்ட முதலாளிமார் என்பவர்களாலேயே இப்போதுள்ள அரசாங்கம் அதிகாரத்துக்குக் கொண்டுவரப்பட்டது. இந்த இலங்கை முதலாளி வர்க்கம் பிரிட்டிஷ் முதலாளி வர்க்கத்துடன் நெருங்கிய தொடர்பு பூண்டுள்ளது. பிரிட்டிஷ் முதலாளி வர்க்கம், ஆங்கில—அமெரிக்க ஏகாதிபத்தியத்திற் தங்கியுள்ளது. ஆகவே, இன்று ஆதிக்கத்திலுள்ள ஐ தே. கட்சி அரசாங்கம் இலங்கைத் தொழிலாளிகளின் நன்மையைமுன்னிட்டு ஏதும் செய்யும் என்று நாம் எதிர்பார்க்கக்கூடாது.

இப்போதுள்ள அதிகார வர்க்கத்தின் கொள்கைகளெல்லாம் முறியடிக்கவேண்டும் அதற்கு இலங்கையின் முன்னேற்றத்திற் சிரத்தை கொண்டுள்ள சகல கட்சிகளும் தத்தம் கொள்கைகளை அறவே யொழித்துவிட்டு ஒன்றுபட்டு ஓர் ஐக்கிய முன்னணி ஏற்படுத்தல் வேண்டும்.

ஸ்ரீமான்கள் கே. ராமநாதன், ஏ வைத்திலிங்கம் முதலியோர் பேசினர்.

---

## கோப்பாய் ஐக்கிய சுருட்டுத் தொழிற்சாலை 1-ம் வருடவிழா

இலங்கையில் முதன்முதலாக ஐக்கிய இயக்க முறையில் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி தொழிற்சாலையின் ஆண்டுவிழா 26-12-47 வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் தொழிற்சாலை மண்டபத்தில் ஆரம்பமாகியது. சங்கத் தலைவர் திரு. குமாரசாமி அவர்கள் தலைமைவகித்தார். தொழிற்சாலை அங்கத்தவர்களும், ஐக்கிய இயக்கப் பெரியார்களும் பிற அன்பர்களுமுட்பட 1000 பேர் வரையிற் சமுகமளித்தனர்.

காரியதரிசி ஸ்ரீ S. R. இராசையா அவர்களால் சென்ற கூட்ட நடவடிக்கைக் குறிப்பு (?) ரலாறும், வருடாந்த அறிக்கையும் வாசித்து ஒப்புக்கொள்ளப்பட்டது. பின் வருடாந்த வரவு செலவுத் திட்டம் வாசிக்கப்பட்டு 30-6 47 முடிய உள்ள லாபப்பணம் 1500 ரூபாவில் பாதுகாப்பு நிதிக்கு 362 ரூபாபோக மிகுதி கட்டிட நிதிக்கு ஒதுக்கப்பட்டது.

பின்னர் தலைவர் வடபகுதி உதவிப் பதிவு காரியஸ்தர் F. A சந்திரசேகரா, வடபகுதி மேற்பார்வைச் சங்கக் காரியதரிசி A. அருளம்பலம், D. R O, T. முருகேசபிள்ளை, J. N. அப்பாத்துரை, N. S. இராசசிங் என்போரால் ஐக்கிய இயக்கம் சுருட்டுத்தொழிற்சாலை வழர்ச்சி என்பன சம்பந்தமாக மிகவும் சிறப்பான விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டது. பின் புதுவருட உத்தியோகஸ்தர் தெரிவு செய்யப்பட்டனர்.

உதவிப்பதிவு காரியஸ்தர் சங்கத்திற்காகச் செய்துகொண்ட பிரத்தியேக வசதிகளுக்கு நன்றியறிதல் கூறியதுடன் பகுதி வட்டாரப் பரிசோதகர் திரு. செ. தாமோதரம் பிள்ளை அவர்களும் உதவிப் பரிசோதகர்களும் சங்கத்திற்காக எடுத்துக் கொண்ட விசேட கவனங்கட்கும், இக் கூட்டத்தைத் தக்க முறையில் நடத்திவதற்கு உதவிபுரிந்ததற்கும் தலைவரால் நன்றி கூறப்பட்டது.

தொழிலாளர் சார்பாக திரு. வீ. சி. கந்தையா அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

—கடித.

## சைவர்களே! விழியுங்கள்! நல்ல தருணம்!

இலங்கைச் சுதந்திர மசோதாவில் தங்கள் சமயத்தைப் பாதுகாக்கக் கூடிய ஓர் விதி சேர்க்கப்பட வேண்டுமென்று பௌத்த குருமார்கள் முதன் மந்திரியாரைக் கேட்டுள்ளார்கள். அவரும் அது நியாயமான கேள்விதான் என்று விடையளித்தார். பௌத்தர், வெள்ளம் வருமுன் அணைகட்டுகிறார்களென்பதைச் சமயவாதிகள் யாவரும் மெச்சவேண்டும்.

வருங் காலத்தில், ஒருவேளை வெகுசீக்கிரத்தில் இலங்கையரசு இடதுசாரிகள் கையிற் போதலுங் கூடும். இவர்களோ, கடவுளில்லைச் சமயமில்லை யென்பவர்கள். பொதுச் சொத்துக்களை யெல்லாம் (தேவாலயச் சொத்துக்களைத்தானும்) தம், பரிபாலனத்தில் எடுத்துக்கொண்டு தங்கள் திட்டப்படி பணத்தைச் செலவிடுபவர். ஆகையால் சமய வளர்ச்சிக்கென விருக்கும் பொருள்களெல்லாம் முதற் பறிமுதலாகும் பின் தேவாலயங்களெல்லாம் யந்திரசாலைகளாகும். அதன் பின் வேறு:—

இப்படி வருவது உண்மையெனக் கண்ட பௌத்தர் பாதுகாப்புத் தேடுவது புத்தியேயாகும்.

சைவசமய வளர்ச்சிக்காக எங்கள் ஆன்றோராலும் தருமமாக விடப்பட்ட பொருள்களோ பல. ஆதலினால் எங்கள் நிலைமையும் அவர்கள் நிலைமையு மொன்றே அவர்கள் பௌத்தர்கள். முதன் மந்திரியாரும் பௌத்த சமயத்தவரே, ஆகையாற் சில விதிகளைச் சேர்ப்பாரென்று எதிர்பார்க்கலாம். இந்த நேரத்தில்நாமும் மனுப்பண்ணினால், அல்லது தூதனுப்பினால் எங்களுக்குஞ் சில பாதுகாப்புக் கிடைக்குந்தானே. ஆகையாற் சைவர்கள்! விழியுங்கள்! இத்தருணம் இனிமேற் கிடையாது பிப்ரவரி 4ம் தேதி சமீபிக்கின்றது, கேளுங்கள்! ஆர்வத்துடன் கேட்டால் தவறாது கிடைக்கும்.

இங்ஙனம்,

சி. நாகையா,

வண்ணை, 14-1-48.

# கந்தபுராணக் கவி நுட்பம்

## திருவிளையாட்டுப் படலம்

வித்துவசிரோமணி ந. ச். பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் வாய்க்கேட்டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும்-பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளியிடப்பட்டுள்ளன.

கருணைசெய் தோளிகண் மிக்க கண்ணவர்க் கருளிச் சேவ்வேள்
அருணமார் பரிதிப் புத்தேள் அநந்தகோ டிகள் சேர்ந் தென்னத்
தருணவில் வீசி நின்ற தனதுரு முற்றுங்காட்ட
இரணிய வரைக்க ணின்ற இந்திரன் முதலோர் கண்டார்.

முருகக்கடவுள் அருள்புரிந்து ஞானவொளியோடு கூடிய கண்களை அத்தேவர்கட்கருளிச் செந்நிறமமைந்த பலகோடி சூரியர்கள் ஒருங்கு சேர்ந்து ஒளிசெய்தலையொத்த இளங்கிரணங்களை வீசிவிளங்குகின்ற தமது பரமேசுவரத் திருக்கோலம் முழுவதையுங் காட்டியருள, மேருமலையிலேநின்ற இத்திரன் முதலிய தேவர்கள் தரிசித்தன ரென்பது கருத்து.

ஒளிகள்மிக்க கண் - ஞானக்கண், அருணம் - பொன், செந்நிறம், தருணம் - இளமை, புதுமை: இரணியவரை - பொன்மலை, மேருமலை, ஞானவொளிகொண்ட கண்களை நல்கிய வழியும் அவன் காட்டாதொழியிற் காணுதலில்லை யாதலின், “செவ்வேள் .... தனதுருமுற்றுங் காட்ட.... இந்திரன் முதலோர் கண்டார்” என்றார்; முதல்சானு (முழந்தாள்) வரையிற்கண்ட தேவர்கள், பின்னர்ப் பெருமானருளால் திருவடிவம் முழுவதையும் தரிசிக்கும் பேற்றைப் பெற்றனராதலின் “முற்றும் ....கண்டார்” எனப்பட்டது. (92)

அடிமுதன் முடியின்காறும் அறுமுக னுருவ மெல்லாங்
கடிதவ னருளால் நோக்கிக் கணிப்பிலா அண்டமுற்றும்
முடிவறு முயிர்கள் யாவும் மூவருந் தேவர்யாரும்
வடிவினி லிருப்பக் கண்டு வணங்கியே வழுத்திச்சொல்வார்.

சண்முகப் பெருமான் கொண்டருளிய திருக்கோலம் முழுவதையும் திருவடி தொடக்கம் திருமுடிவரை அந்தப் பெருமானுடைய திருவருளைப் பெற்று உடனே தரிசித்து அளவில்லாத அண்டங்களும் அழிவற்ற எல்லாவுயிர்களும் மும்மூர்த்திகளும் ஏனைய தேவர்களும் அத் திருவடிவத்தின் கண்ணே அமைந்து விளங்குவதை யுணர்ந்து, பெருமானைப் பணிந்து தோத்திரஞ் செய்து பின்வருமாறு விண்ணப்பஞ் செய்வாராயினர் என்பது கருத்து.

அவனருளாலே உடனே முழுவதுங் கண்டனராதலிற் “உருவமெல்லாங் கடிது நோக்கி” யென்றார்; காலஎல்லையுங் கணக்கினெல்லையு மில்லாவுயிர்களாதலின் “முடிவறு முயிர்கண் முற்றும்” எனப்பட்டது; மூவர்-பிரமா விஷ்ணு ருத்திரன்: தேவர் யாவருமென்றது இந்திரன் முதலாம் முப்பத்து முக்கோடி தேவரை; இங்கே தேவர்களுக்கு அறுமுகத்திறைவனே காட்டுவான் காண்பான் காட்சிப்பொருளாக நின்றமை காண்க. வழுத்துதல்-தோத்திரம்பண்ணுதல். (93)

அம்புவி முதலாம் பல்பே ரண்டமும் அங்கங் குள்ள
உம்பரும் உயிர்கள் யாவும் உயிரிலாப் பொருளும் மாலுஞ்
செம்பது மத்தி னேனுஞ் சிவனேடுஞ் செறிதல் கண்டோம்
எம்பெருமான் நின் மெய்யோ அகிலமு மிருப்ப தம்மா.

எங்கள் பெருமானே! சிறந்த பிருதிவியண்ட முதலாகிய பலவகையாகவுள்ள பெரிய அண்டங்களும், அந்த அந்த அண்டங்களில் வசிக்குந் தேவர்களும், ஏனைய உயிருள்ளனவும் உயிரிலாப் பொருள்களும், விஷ்ணுவும், செந்தாமரைப் பூவிலிருக்கும் பிரமதேவனும் உருத்திர மூர்த்தியும் அமர்ந்திருப்பதைத் தரிசித்தோம்; தேவரீருடைய திருப் பெருவடிவமோ எல்லாமிருப்பதற்குரிய இடம்! என்பது கருத்து.

உயிர்கள் யாவும் உயிரிலாப் பொருளும் என்றது சராசரங்கண் முழுவதையுமெண்க; பெருமானுடைய திருப்பெரு வடிவத்தை வணங்கித் தரிசிக்குந் தேவர்களாகிய தாமும் அத்திருப்பெரு வடிவத்திற் செறிந்திருப்பக்கண்டு வியப்படைந்தனராதலின் “அம்மா” என்ற வியப்பிடைச்சொல் வந்ததென்க. (94)

அறிகில மிந்நாள் காறு மகிலமு நீயேயாகி
யுறைதரு தன்மை நீவந் துணர்த்தலின் உணர்ந்தே மன்றே
பிறவொரு பொருளுங் காணேம் பெருமநின் வடிவமன்றிச்
சிறியேம்யாம் உனது தோற்றந் தெரிந்திட வல்ல மோதான்

எம்பெருமானே! எல்லாம் தேவரீரேயாகி யெழுந்தருளி விளங்கும் இரகசியத்தை இற்றைவரையில் நாங்கள் அறிந்திலேம, தேவரீர் இப்பொழுது வந்து காட்டியருளியமையாற் கண்டோம், தேவரீருடைய திருப்பெருவடிவத்தை யொழிய உதினின்றும் வேறாக எப்பொருளையுங் காண்கிலேம் (காரணம்) நாங்கள் சின்னூட் பல்பிணிச் சிறுவினேம், ஆனதினாலே தேவரீருடைய திருப்பெருங் கோலத்தை (நாமாக)த் தரிசித்தற்கு வல்லோமாவோமோ என்பது கருத்து.

“எல்லாவுலகமு நீயேயானாய்” என்பார் அகிலமும் நீயேயாகி யுறைதருதன்மையெனவும், இதுகாறுந் தேவரீருடைய திருவருள் எங்களிடத்துக் கூடாமையின் “இந்நாள் காறும் அறிகிலம்” எனவும், இப்பொழுது தேவரீர் காட்டியமையாற் கண்டேமென்பார் ‘நீவந்துணர்த்தலின் உணர்ந்தோம்” எனவும், நாங்கள் மாறிமாறிப் பிறந்திறந் துழலும் பசுவர்க்கத்திற் குட்பட்டுள்ளோமாதலினால், இனியேனும் தேவரீர் காட்டினாற் காண்பதேயன்றி நாமாகக் காணமாட்டேமென்பார் “சிறியேம உனது தோற்றந் தெரிந்திட வல்லமோ” எனவுங் கூறினரென்க. (95)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவலர் பதிப்பு நூல்கள்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் பதிப்புப் புத்தகங்களை, வட இலங்கை முழுவதற்தும் வருவித்து விற்தும் உரிமை யாழ்பாணம் சைவ பரிபாலனசபை மனேஜருக்கு இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கின்றது; புத்தக்ங்கள் விரைவில் வந்துசேரும், வந்து சேர்ந்தவுடன் இப் பத்திரிகை வாயிலாகத் தெரிவிக்கப்படும்.

வண்ணார்பண்ணை
16—1—48

மனேஜா
யாழ்ப்பாணம் சைவப்பிரகாச யந்திரசாலை



# நாதன்ஸ் பிரசுரம்

**மலேயாவுக்குச் சகல வசதிகளுமடங்கிய பிரயாணக் கட்டணம் குறைக்கப்படடிருக்கிறது**

யாழ்ப்பாணம் - சென்னை - பினங் ரூபா 170
,, நாகபட்டணம் 115

யாழ்ப்பாணமிருந்து சென்னைவரை றெயில் இரண்டாம் வகுப்பு அன்றேல் ஆகாயவிமானத்தில் உல்லாசப் பிரயாணம் கபபலில் டெக் உட்படக் கட்டணம் ரூபா 190

**எஸ். ஆர். எஸ். நாதன்**

21/3, ஸ்ரான்லி ரேட் :: யாழ்ப்பாணம்
எங்கள் கிளைஸ்தாபனங்கள்: சென்னபட்டணம், நாகபட்டணம், சிங்கப்பூர், கொழும்பு முதலியவிடங்களி லுண்டு
Std 22. 6-6-47—6-6-48



# திருவருட்பயன்

**சைவத்திருவாளர் சு. சிவபாதசுந்தரம் அவர்கள் (B.A.)**

இயற்றிய விரிவுரையோடு கூடியது. தமிழ் ஆங்கில எஸ். எஸ். ஸி. வகுப்புகளுக்குச் சமய பாடமாக விதிக்கப்பட்டது. புதுக்கிய பதிப்பு

விலை சதம் 75 ( அனு 12 )

## சைவபோதம் (முதற் புத்தகம்)

மேற்படி ஆசிரியர் எழுதியது
13-ம் பதிப்பு: விலைசதம் 50 ( அனு 8 )
யாழ்ப்பாணம் சைவப்பிரகாச யந்திரசாலையிலும், பிரபல புத்தகசாலைகளிலும் பெறலாகும்

**மனேஜர், சைவப்பிரகாச யந்திரசாலை**
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்



# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

**வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.**
**இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா**
**134,3670**
**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சநித் சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும், தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திறகு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
கிளாக்பர்.

Std. 14 20-11-46—20-11-47 (தி)



# இலங்கைவங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

**இலஙகை அரசாங்கத்தின் வங்கிக்காரர்**

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 000, 00 |

தலைமைக்காரியாலயம்:- பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.
நியுயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்விங் ட்ரஸ்ற் கம்பனி.
லண்டன் ஏஜெண்டுகள்:- பார்க்கிளேஸ வங்கி.
கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்), வதுளை
யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:- 242, ஆஸ்பத்திரிரேட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

**நடைமுறைக்கணக்கு:-**
இலங்கையில் (திருக்கோணமலையைக் குருணாக்கல், வதுளை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள்கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்

**சேமிப்புப் பணம்:-**
ஆகக்கூடிய தொகை ரூபா 10,000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

**நிரந்தர சேமிப்பு:-**
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

**கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-**
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

**நாணயமாற்று:-**
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

**பிறநாட்டு விவகாரப் பகுதி:-**
ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

T. S. முத்துலிங்கசாமி
ஏஜெண்டு,

(Std.29 1-8—30-7-48)



# பசந்த லேகியம்

இதனல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும்தீர்ந்து, தேகத்துக்குப்பலம், உண்டாக்கும்.

ஒருறாத்தல் விலை ரூபா 25
அரைறாத்தலுக்கு ரூபா 12-50
கால்றாத்தல் ரூபா 6-25

விலாசம்:

**க. ஆறுமுகம்பிள்ளை**
சி. 156, செக்கடித்தெரு கொழும்பு
Std. 1. 26—3—47 to 1—4—48



# கந்தசாமி வைத்தியர்

## அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையும் தீர்க்கும். பித்தக் கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற்புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளை மாற்றி நல்ல பசி உண்டாக்கும். மேகம் மேகத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீக்கும். நெற்பனிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும். கருவை அழியாமல் காக்கும், பாலர்கட்கு கணை பாண்டு இராக்காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி.

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம். சிறியவர்கள் கால் கழஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்

**கால் றாத்தல் விலை ரூபா 5-00**
வீ. பீ. பி. யில் அனுப்புவோம்.

விலாசம்:
ஆயுள்வேத சிவசோதி மெடிக்கல்ஹோல்
— வல்வெட்டித்துறை —
Std 25 1-7-47—30-6-48 (செ)


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai Jaffna. on Tuesday. January 20. 1948

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org